# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்
# 2021 – 2022
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 8

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:.............................................................

மொத்தப்புள்ளிகள் : 100

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. ஒல்காப் பெரும் புகழ் எனப் புகழப்படும் நூல்

அ) தொல்காப்பியம் ☐ ஆ) சிலப்பதிகாரம் ☐

இ) மணிமேகலை ☐ ஈ ) சீவகசிந்தாமணி ☐

2. குபுகுபு என்ற சொல்

அ) அடுக்குத்தொடர் ☐ ஆ) இரட்டைக்கிளவி ☐

இ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஈ ) இணைமொழி ☐

3. புதிதாகத் தோன்றிய இலையைச் சுட்டும் பெயர்

அ) தளிர் ☐ ஆ) இலை ☐

இ) கொழுந்து ☐ ஈ ) பழுப்பு ☐

4. அறிஞர்கள் கூடி எதிர் உரை செய்யும் அரங்கு

அ) அரங்கேற்றம் ☐ ஆ) ஒத்திகை ☐

இ) வெள்ளோட்டம் ☐ ஈ ) பட்டிமன்றம் ☐

5. ஈழத்து ஆசுகவி என அழைக்கப்பட்டவர்

அ) கல்லடி வேலுப்பிள்ளை ☐ ஆ) ஆறுமுகநாவலர் ☐

இ) காளமேகப்புலவர் ☐ ஈ ) விபுலாநந்தர் ☐

6. மரத்திலிருந்து பழம் விழுந்ததை நான் கண்டேன். இச் சொல்லியம்

அ) கூட்டுச்சொல்லியம் ☐ ஆ) கலப்புச்சொல்லியம் ☐

இ) தனிச்சொல்லியம் ☐ ஈ ) வியப்புச்சொல்லியம் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

7. உருத்திரமூர்த்தியைக் கவர்ந்த மலர்

அ) காட்டுமல்லிகை ☐ ஆ) முல்லை ☐
இ) செவ்வரத்தை ☐ ஈ) தாமரை ☐

8. கொடுத்தான் என்ற வினைச்சொல்லின் விகுதி

அ) கொடு ☐ ஆ) அன் ☐
இ) ஆன் ☐ ஈ) த் ☐

9. குண்டலகேசி என்ற காப்பியத்தை எழுதியவர்

அ) திருத்தக்கதேவர் ☐ ஆ) நாதகுத்தனார் ☐
இ) சீத்தலைச்சாத்தனார் ☐ ஈ) இளங்கோவடிகள் ☐

10 வீரத்தில் சிறந்தவன் இராவணன். இச் சொல்லியம் உணர்த்துவது

அ) நீங்கற்பொருளை ☐ ஆ) எல்லைப்பொருளை ☐
இ) ஒப்புப்பொருளை ☐ ஈ) ஏதுப்பொருளை ☐

11. பெங்கூற்றர் கோட்டை அமைந்துள்ள இடம்

அ) வெற்றிலைக்கேணி ☐ ஆ) ஆனையிறவு ☐
இ) யாழ்ப்பாணம் ☐ ஈ) பூநகரி ☐

12. நான் என்ற சொல்லுடன் இரண்டாம் வேற்றுமை உருபு சேரும்போது

அ) எனக்கு ☐ ஆ) உன்னை ☐
இ) என்னால் ☐ ஈ) என்னை ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

13. ‘அது’ என்ற உருபு ஏற்கும் வேற்றுமை

அ) 2 ஆம் வேற்றுமை ☐ ஆ) 6 ஆம் வேற்றுமை ☐

இ) 5 ஆம் வேற்றுமை ☐ ஈ) 7 ஆம் வேற்றுமை ☐

14. சுருக்கு என்ற சொல்லின் பொருள்

அ) வானம் ☐ ஆ) முகில் ☐

இ) ஆந்தை ☐ ஈ) முடிச்சு ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

15. கொதித்து ஆறிய நீரைப் பருகுவோம். இதில் தோன்றா உறுப்பு

அ) செயப்படுபொருள் ☐ ஆ) எழுவாய் ☐

இ) பயனிலை ☐ ஈ) அடைமொழி ☐

16. ஆங்கிலேயரையும் ஒல்லாந்தரையும் எதிர்த்துப் போராடிய வன்னியின் கடைசி மன்னன்

அ) பண்டாரவன்னியன் ☐ ஆ) எல்லாளன் ☐

இ) இராவணன் ☐ ஈ) சங்கிலியன் ☐

17. பின்வருவனவற்றுள் சைவநெறி இலக்கியம்

அ) சீறாப்புராணம் ☐ ஆ) தேம்பாவணி ☐

இ) திருவாசகம் ☐ ஈ) இயேசுகாவியம் ☐

TEDC

18. விளிவேற்றுமை என அழைக்கப்படுவது

அ) முதலாம்வேற்றுமை ☐ ஆ) எட்டாம்வேற்றுமை ☐

இ) இரண்டாம்வேற்றுமை ☐ ஈ) ஆறாம்வேற்றுமை ☐

19. வரதன் என்ற இயற்பெயர் கொண்ட புலவர்

அ) காளமேகம் ☐ ஆ) பாவேந்தர் ☐

இ) பாரதியார் ☐ ஈ) கபிலர் ☐

20. ஓடியது என்ற சொல்லை எதிர்மறையாக மாற்றினால்

அ) ஓடி ☐ ஆ) ஓடியது ☐

இ) ஓடும் ☐ ஈ) ஓடவில்லை ☐

21. தமிழ்த்தாய் வாழ தகடூரான் தந்த கனி

அ) நெல்லிக்கனி ☐ ஆ) நாவற்கனி ☐

இ) விளாங்கனி ☐ ஈ) மாங்கனி ☐

22. பாய்க்கப்பல் என்பதைப் பிரித்து எழுதினால்

அ) பாய் + கப்பல் ☐ ஆ) பாய்க் + கப்பல் ☐

இ) பாய் + க்கப்பல் ☐ ஈ) பாய்ங் + கப்பல் ☐

23. நண்பர் என்ற சொல்லின் எதிர்ச்சொல்

அ) உலோபி ☐ ஆ) தோழர் ☐

இ) பகைவர் ☐ ஈ) உழவர் ☐

24. அ,இ,உ என்பன

அ) சுட்டெழுத்துகள் ☐ ஆ) வினாவெழுத்துகள் ☐

இ) உயிர்மெய்யெழுத்துகள் ☐ ஈ) மெய்யெழுத்துகள் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

25. தமிழின் செம்மை கருதி அதற்கு வழங்கப்பட்ட பெயர்

அ) தீந்தமிழ் ☐ ஆ) செந்தமிழ் ☐

இ) பைந்தமிழ் ☐ ஈ) தேன்தமிழ் ☐

26. கச்சணிந்த ஆய்ச்சியரின் கைக்கு வந்தபின் நீர் பெற்ற பெயர்

அ) பால் ☐ ஆ) மோர் ☐

இ) தயிர் ☐ ஈ) தண்ணீர் ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

27. உழவனுக்கு உழத்திபோல புலவனுக்கு

அ) புலத்தி ☐ ஆ) குறத்தி ☐

இ) இறைவி ☐ ஈ) இடைச்சி ☐

28. பவளவாய் என்ற உவமை அணியில் பவளம் என்பது

அ) உவமானம் ☐ ஆ) உவமேயம் ☐

இ) பொதுத்தன்மை ☐ ஈ) உவமைஉருபு ☐

29. நாடு தோறும் தமிழர் கலைநிகழ்வுகளை நடத்துகின்றனர். இதில் இடம்பெற்றுள்ள இடைச்சொல்

அ) ஓ ☐ ஆ) நாடு ☐

இ) உம் ☐ ஈ) தோறும் ☐

TEDC

30. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்களில் ஒன்று

அ) முள்ளியவளை ☐ ஆ) கந்தரோடை ☐

இ) நல்லூர் ☐ ஈ) ஆனைக்கோட்டை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**மிக இளம் அகவையிலேயே அரியணை ஏறிய கரிகாலன் சிறப்பாக ஆட்சி செய்தார். இவர் இளம் அகவையிலே எதிரிகளால் சிறை வைக்கப்பட்டார். இவர் சிறை வைக்கப்பட்டிருந்த அறைக்கு எதிரிகளால் தீ வைத்து எரிக்கப்பட்டது. இத்தீயினால் காலில் ஏற்பட்ட தீப்புண்ணின் காரணமாகப் பின்னாளில் 'கரிகாலன்' என்று அழைக்கப்பட்டார். வெண்ணிப்பறந்தலை என்னும் இடத்தில் சேரர் மற்றும் பாண்டியர்களைக் கரிகாலன் தோற்கடித்தார். இவர் இலங்கை மீது படையெடுத்துச் சென்றார். அங்கு சிறைப்பிடிக்கப்பட்ட போர்க்கைதிகளைக் கொண்டு காவிரி ஆற்றின் மீது கல்லணையைக் கட்டினார். இது கல்லும் களிமண்ணும் கலந்து கட்டப்பட்டது. இக் கல்லணையே மிகப் பழமையானது. 2000 ஆண்டுகளாகியும் இன்னும் கரிகாலனின் புகழ்பாடும் வண்ணம் இக் கல்லணை உள்ளது. கல்லணையைக் கட்டிய பழந்தமிழரின் தொழில்நுட்பம் இன்று வரை வியப்பாகவுள்ளது. இக் கல்லணையைக் கட்டுவித்த கரிகாலன் நினைவாக காவிரியாற்றின் கரை ஓரத்தில் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு யானை மீது கரிகாற்சோழன் அமர்ந்த நிலையில் வெண்கலச் சிலை ஒன்றும் உள்ளது. இதைப் பார்வையிட பல இடங்களிலிருந்தும் மக்கள் வருகின்றனர்.**

1. இலங்கைமீது படை எடுத்துச் சென்றவர் யார்?

___________________________________________

2. கரிகாலன் எவ்வாற்றின் மீது கல்லணையைக் கட்டினார்?

___________________________________________

3. கரிகாலன் யாரால் சிறை வைக்கப்பட்டார்?

___________________________________________

4. கல்லணை எவற்றால் கட்டப்பட்டது?

___________________________________________

5. யாருடைய தொழில்நுட்பம் இன்று வரை வியப்பாகவுள்ளது?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10

3) **பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. பண்டாரவன்னியன் ஆங்கிலேயரின் மூன்று பீரங்கிகளையும் கைப்பற்றிய இடம் எது?

____________________

2. அதியர்மான் நெல்லி மரத்தில் இருந்து பறித்த கனியின் சிறப்பு என்ன?

____________________

____________________

3. ''என்னம்மா நமக்கு? நாங்கள் எதனிலும் குறைவதில்லை ...'' இக் கூற்று யாரால் எதைப் பார்த்துக் கூறப்பட்டது?

____________________

____________________

4. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழாவின் பெயரைத் தருக.

____________________

5. ''வலம்படு வாய்வாள் ஏந்தி...... ''என்ற பாடல் இடம்பெற்ற நூல் எது?

____________________

6. பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள் எக்கழகக்காலத்தைச் சேர்ந்தவை?

____________________

7. பண்டாரவன்னியனிடம் படை உதவி பெற்றுக்கொண்ட கண்டி மன்னன் யார்?

____________________

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## மாவீரரே!

| | | |
|---|---|---|
| தவிக்கின்றோம் | எந்நாளும் | மறவர் |
| துதிக்கின்றோம் | மீட்புக்காய் | |

விடுதலைக் கனல் சுமந்து
வீணர்கள் படை எரித்து
தமிழ் ஈழ ____________________
களமாடி வீழ்ந்தவரே

மண் காத்த ____________________ உம்மை
மனதோடு சுமக்கின்றோம்
நீர் விதையான மண் பார்த்து
கண் சொரிந்து ____________________

____________________ அழியாது
உம் தியாக வரலாறு
விளக்கேற்றித் ____________________
விரைவில் உம்பணி முடிப்போம்!

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. வினா எழுத்துகள் எத்தனை? ______________________

   அவற்றுள் இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   ______________________

   ______________________

2. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் சொல்லியம் எழுதுக.

   3 ஆம் வேற்றுமை

   ______________________

   5 ஆம் வேற்றுமை

   ______________________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

| | | | |
|---|---|---|---|
| அஃறிணை | ______ | இரட்டைக்கிளவி | ______ |
| பெயரெச்சம் | ______ | படர்க்கை | ______ |
| ஒருமை | ______ | இறந்தகாலம் | ______ |

4. செயப்படுபொருள் இடம்பெறுமாறு இரண்டு சொல்லியங்கள் எழுதுக.

   ______________________

   ______________________

5. தேடினான் என்ற வினைச்சொல்லின் பகுதி, விகுதி, இடைநிலை என்பவற்றைத் தருக.

   பகுதி ______________________

   விகுதி ______________________

   இடைநிலை ______________________

TEDC

புள்ளிகள் 15

6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.

1. பாவேந்தரது பாடல்கள் ________________ மிகுந்தவை.
( பகுத்தறிவு, பகுத்தரிவு )

2. இன்று வேலை இல்லாத ________________ தொகை அதிகரித்துச் செல்கின்றது.
( இழைஞர், இளைஞர் )

3. தமிழர் தம் ________________ ப் போராடுகின்றனர்.
( விடுதலைக்காக, விடுதளைக்காக )

4. ________________ கதிரவன் காலிக்க செடிகளில் பூக்கள் மலர்ந்தன.
( கீழ்வானில், கீழ்வாணில் )

5. குழந்தையின் ________________ இருந்து கண்ணீர் வழிந்தது.
( விளிகளில், விழிகளில் )

| புள்ளிகள் 05 |
|---|

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- காளமேகப்புலவர்
- பண்டாரவன்னியன்
- நீங்களும் உங்கள் உறவினரும்
    - உறவினர் வாழும் இடங்கள்
    - உறவுமுறைகள்
    - உறவினர்களால் ஏற்படும் நன்மைகள்
    - உறவினர்களுக்கு நாம் செய்ய வேண்டியவை

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC